251

# திருக்குறள் மணிகள் 80

## அறிவியல் உரை

16—6—48-ல் அரசாங்கத்தார் திருத்தியமைத்த பாடப்பட்டியின்படி

நான்காம் படிவத்திற்கு

உரியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 951

உரையாசிரியர்
கலைப் பெரும்புலவர்
ஆ. குருசாமி ஐயா அவர்கள் (தமிழ் வித்துவான்)
தலைமைத் தமிழ் ஆசிரியர்
நகராள் மன்ற உயர்நிலைப்பள்ளி, கரூர்

தமிழ் நாடு நூற் பதிப்பகம்
உறையூர், :: திருச்சிராப்பள்ளி

[... பதிப்பு] 1950 [விலை 0 -5— 0

TB
031(9)
N50
147315

சிட்டி பிரஸ்,
மதுரை ரோடு,
திருச்சிராப்பள்ளி.

# பதிப்புரை

திருக்குறள், உலக அறிஞர்களால் போற்றப்பட்ட சிறந்த நூல் உலகிற்குப் பொதுவான நீதியையும், அறிவியலையும் கூறுவதால் உலகப் பொதுநூல் எனப் புகழ் பெற்றது. எக்காலத்திற்கும் ஏற்றது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதி (பிரிவு) களையும், 133 அதிகாரங்களையும், 1330 குறள் வெண்பாக்களையும் உடையது.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருடைய காலம் வரலாறு முதலானவை தெளிவாக விளங்கவில்லை. இவரைப் பற்றிப் பலவிதமான கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவை தகுந்த சான்றுகளுடன் அமைந்தனவல்ல. இவர் தமிழ் நாட்டில் தமிழ் மரபில் தோன்றியவர்; தமிழ்ப் பேரறிஞராக விளங்கியவர்; தமிழ்ப் பண்பாட்டறிவினால் உலகியல், அரசியல், அறிவியல்களை நன்கு உணர்ந்து ஒப்புயர்வற்ற செப்பமுடைய திருக்குறளை இயற்றினார். இது முதல் நூல்.

உலகப் பொதுநூலாக விளங்கும் திருக்குறளுக்குப் பழைய உரைகள் பல உள்ளன. அரசாங்கத்தார் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக வைத்துள்ள பகுதிகளுக்கும் பல உரைகள் பல வகைகளில் வெளிவந்துள்ளன. எனினும், உலகப் பொது நெறிக்கும், அறிவியலுக்கும், வள்ளுவர் கொள்கைக்கும், தமிழ் மரபிற்கும் பொருந்திய வகையில் சிறந்த முறையில் இவ்வுரை எழுதப்பெற்றுள்ளது. இம்முறையில் உரை எழுதி அளித்த ஆசிரியர் அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்

ஆசிரியர்களும் தமிழ் அன்பர்களும் இதற்கு ஆக்கமளித்து திருக்குறளின் உண்மை உயர்வை மாணவர்களும் மற்றவர்களும் அறியும் வண்ணம் உதவிபுரிய வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

உறையூர்,
திருச்சிராப்பள்ளி.

தமிழ் நாடு நூற் பதிப்பகத்தார்.

# முன்னுரை

திருவள்ளுவர் அருளிய திருக்குறளை, உலகில் பல மொழிகளில் வல்ல அறிஞர்கள் படித்தும் பல மொழிகளில் மொழி பெயர்த்தும் இதன் பெருமையைப் பலவாருகப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். இவ்வாறு உலகில் தனிப் பெருமையுடன் தலைசிறந்து விளங்கும் திருக்குறளை அரசாங்கத்தார் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக வைத்துள்ளது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

இதில் அரசாங்கத்தார் பாடத்திட்டப்படியே குறள் மணிகள் அமைந்துள்ளன மூலபாடத்தைச் சீரும், தளையும் சிதையாவகையில் பிரித்தெழுதப் பட்டுள்ளது. பொருள் கூறும்போது பொருள் விளங்க, சேர்த்து எழுதவேண்டிய சொற்களையும், இடையில் சேர்க்கவேண்டிய பொருள்களையும் சேர்த்தெழுதப் பட்டுள்ளன.

ஆசிரியர்கள் தலைப்பை விளக்கி, மூலபாடத்தைப் படித்துப் பிரித்து, உரைநடை முறைப்படிக் கொண்டு கூட்டிக் காட்டிய பின் பொருள் காணும் முறையைக் கையாளவேண்டும். குறளின் சொற்பொருளையும் பொதுப்பொருளையும் கருத்தையும் புரிந்து கொண்டார்களா வென்பதை அறிந்துகொள்ள வேண்டும். மாணவர்களின் பேச்சிலும் எழுத்திலும் குறளின் சொற்களையும் அடிகளையும் பாக்களையும் கருத்தையும் எடுத்தாளும் விருப்பத்தையும் பழக்கத்தையும் ஏற்படுத்திவிடவேண்டும். அதன் படி நடக்கவும் பயிற்சியளித்துத் தூண்டவேண்டும்.

இம்முறைகளைக் கையாண்டால் திருக்குறளை மாணவர்களுக்குப் பாடமாக வைத்ததன் பயன் கைகூடும். மாணவர்கள் ஐந்தாண்டுகளில் தமிழ் மொழியின், தமிழ் நெறியின், தமிழ்ப் பண்பின் தன்மை நன்மை மேன்மைகளை நன்குணர்ந்து, இளம் புலவர்களாக விளங்கிப் பின் பெரும் புலவர்களாகவும் ஆவார்கள் எனத் திண்ணமாக எண்ணுகின்றேன். இதற்கு ஆசிரியர்கள் ஏற்ற உதவியாக இருப்பார்களெனவும், மாணாக்கர்களும் குறளை விருப்பமுடன் படித்து, அறிந்து, உணர்ந்து மாண்பினை ஆக்கிக்கொள்ளுவதில் ஊக்கமும் நோக்கமும் உடையவர்களாய் இருப்பார்களெனவும் நம்புகின்றேன்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

இங்ஙனம்

ஆ. குருசாமி

உ

# திருக்குறள் மணிகள் 80

## அறிவியல் உரை

## [நான்காம் படிவம்]

1. கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (இறையருள்)

(பொருள்) வால் அறிவன் - உண்மைப் பேரறிவு வண்ணமாக விளங்கும் இறைவனது, நல்தாள் - நன்மை தரும் அடி என்னும் திருவருளைச் சார்ந்து நின்று, தொழா அர் எனின் - உயிர் அறிவு வளர்ச்சி அடைவதற்குரிய தொண்டைச் செய்யாவிடின், கற்றதனால் - அறிவு நூல்களைக் கற்றதனால், ஆய பயன் என்? உண்டாகிய பயன் யாது (ஒன்றுமில்லை).

(விளக்கம்) இறைவர் பேரறிவு வண்ணமாய் உள்ளவர். உயிர்கள் படிப்படியாக அறிவு வளர்ச்சி அடைந்து பேரறிவு பெற்றால், இறைவரது உண்மைத் தன்மையை உணர்ந்து உண்மை இன்பத்தை அடையும், இங்ஙனம், தாம் அறிவளர்ச்சி பெறவும் பிற உயிர்களும் அறிவு வளர்ச்சி அடையவும் செய்யும் தொண்டுதான் அறிவுடையவர் புரியும் உண்மையான தொழுகை ஆகும். அறிவு வளர்ச்சிக்குரிய பணியை ஆற்றாதவிடத்துக் கற்றதனால் பயனில்லை.

(கருத்து) உயிர்கள் அறிவு வளர்ச்சியடைந்து அறிவுருவாக விளங்கும் இறைவரது உண்மைத் தன்மையை அறிந்து இன்புறும் வண்ணம் அறிவுப் பணியாற்றுவதே கற்றறிந்தவரின் கடமையாகும்.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை (வான சிறப்பு)

(பொ-ள்) துப்பார்க்கு - உணவை உண்டு வாழும் உயிர்களுக்கு; துப்பு ஆய் - வலிமை தரக்கூடிய - துப்பு ஆக்கி - உணவுப் பொருள்களை (நீரினால்) விளைவித்துக் கொடுத்து, துப்பார்க்கு - அவ்வுணவுப் பொருள்களை இயற்கையாகவேனும் செயற்கையாகச் சமைத்தேனும் உண்பவர்களுக்கு, துப்பு ஆயதும் - சமைத்தற்குதவும் நீராகவும் நீர் உணவாகவும் நின்று துணை செய்வதும், மழை - மழையே ஆகும்.

(வி-ம்) துப்பு - உணவு, வலிமை, துணை, உணவுப் பொருள்விளைவதற்கும், சமைத்தற்கும், உண்ணும்போது பருகுவதற்கும் துணையாய் இருப்பது மழை நீர் ஆகும்.

(க-து) உயிர் வாழ்க்கைக்கு மழையே முதற் காரணம்.

3. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல் நான்கின்
இழுக்கா வியன்ற தறம் (அறம்)

(பொ-ள்) அழுக்காறு - பொறாமை, அவா - ஆசை, வெகுளி - சினம், இன்னுச் சொல் - கடுஞ்சொல், நான்கின் இழுக்கா(து) - இந்நான்கினாலும் குற்றம் உண்டாகாமல், இயன்றது - நடப்பது, அறம் - அறமாகும்.

(க-து) பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல், களால் குற்றம் உண்டாகாமல் நடப்பதே அறமாகும்.

4. அன்பினும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு (அன்புடைமை)

(பொ-ள்) அன்பு - ஒருவனிடம் அமைந்த அன்பு என்னும் பண்பானது, ஆர்வம் உடைமை ஈனும் - மற்றவர்

களிடம் விருப்பத்தை உண்டாக்கும், அது - அவ்விருப்பமானது, நாடா - தேடி அடைய முடியாத, நண்பு என்னும் சிறப்பு-நட்பு என்னும் சிறந்த செல்வத்தை, ஈனும்- உண்டாக்கும்.

(க-து) அன்பு விருப்பத்தையும் நட்பையும் உண்டாக்கும்.

5. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (விருந்தோம்பல்)

(பொ-ள்) செல்விருந்து ஓம்பி - சென்ற விருந்தினரைப் போற்றி, வருவிருந்து பார்த்திருப்பான் - மேலும் வரக்கூடிய விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன். வானத்தவர்க்கு - அறிவால் உயர்ந்த பெரியோர்களுக்கு, நல்விருந்து - நல்ல விருந்து ஆவான்.

(வி-ம்) வான்-உயர்வு, பெருமை. அறிவால் உயர்ந்து பெருமை பெற்றவர்கள் வானவர், வானத்தவர் எனச் சிறப்பித்துக் கூறப்படுவார்கள். விருந்தோம்பும் ஒருவனை மற்ற அனைவரும் விரும்புவார் ஆயினும், அறிவால் உயர்ந்த பெரியோர் அவன் உயர்ந்த பண்பினை நன்குணர்ந்து அவனைத் தம்மில்லத்திற்கழைத்து விருந்தாக்கிக்கொள்ள விழைவார். ஆதலால், அவனை ஒரு கால் தம்மில்லம் வந்து செல்லவேண்டுமென வேண்டுவர். அவனும் அவர் அன்பிற்கிணங்கி மறுக்க வியலாமல் அவர் இல்லத்திற்கு நல்விருந்தாகச் செல்லுவான். அறிஞர்கள் அளித்த விருந்தை அருந்தி அளவளாவி மகிழ்ந்து இன்பம் அடைவான். இதையே "வானத்தவர்க்கு நல்விருந்து" என்றார்.

(க-து) விருந்தோம்பும் ஒருவன் அறிவால் உயர்ந்த பெரியோர்களின் விருந்தினராகப் பாராட்டப்படுவான்.

6. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்(து)
இன்சொலன் ஆகப் பெறின் (இனியவை கூறல்)

(பொ-ள்) முகன் அமர்ந்து - முகமலர்ச்சியுடன் விரும்பி, இன்சொலன் ஆகப் பெறின் - இனிய சொல்லையும் உடையவனாக இருந்தால், அகன் அமர்ந்து - மனம் விரும்பி, ஈதலின் - கொடுப்பதை விடவும், நன்று நன்மையாகும்.

(க-து) முகமலர்ந்த இன்சொல் ஈதலினும் நன்மை தரும்.

7. பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது (செய்ந்நன்றியறிதல்)

(பொ-ள்) பயன் தூக்கார் - பதில் உதவியை எதிர் பாராதவர், செய்த உதவி - செய்த உதவியின், நயன் தூக்கின் - நன்மையை ஆராயின், நன்மை கடலின் பெரிது - அந் நன்மை கடலினும் பெரியதாகும்.

(க-து) பதில் கருதாமல் செய்த உதவி பெருமையுடையதாம்,

8. கெடுவாக வையா துலகம்நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு (நடுவு நிலைமை)

(பொ-ள்) நடு ஆக - நடு நிலைமையாக, நன்றிக் கண் தங்கியான் - நன்னெறியில் நிலைத்திருப்பவனது, தாழ்வு - வறுமையை, உலகம் - உயர்ந்த அறிவுடையோர், கெடுவாக வையாது - வறுமையாகக் கருதமாட்டார்கள்.

(க-து) நடுவுநிலையுடையவன் வறுமை வறுமையாகாது.

9. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (அடக்க முடைமை)

(பொ-ள்) தீயினால் சுட்டபுண் - ஒருவர் உடலில் நெருப்பினால் சுட்டபுண், ஆறும் - நாளடைவில் ஆறி

விடும். (ஆனால்) நாவினால் சுட்ட வடு - கொடுஞ் சொற்களால் சுட்ட தழும்பானது, உள் ஆறாது மனத்தின்கண் என்றும் ஆறாமல் நின்று வருத்தும்.

(க-து) தீயைவிட கொடுஞ்சொல் கொடியது.

**10.** நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (ஒழுக்கமுடைமை)

(பொ-ள்) நல் ஒழுக்கம் - நல்ல நடத்தையானது, நன்றிக்கு - பின்னால் அடையும் நற்பயனுக்கு, வித்து ஆகும - முன்னால் ஊன்றிய விதையாகி இன்பம் தரும். தீ ஒழுக்கம் - கெட்ட நடத்தையானது. என்றும் - எப்போதும், இடும்பை தரும் - துன்பம் தரும்.

(க-து) நல்லொழுக்கத்தால் இன்பமும் தீயொழுக்கத்தால் துன்பமும் உண்டாகும்.

**11.** ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து
(பொறையுடைமை)

(பொ-ள்) ஒறுத்தாரை - தீமை செய்தவர்க்குத் தண்டனை கொடுத்தவரை, ஒன்றாக வையார் - அறிவுடையோர் ஒரு பொருளாக மதிக்கமாட்டார். பொறுத்தாரை - பொறுத்துக்கொண்டவரை, பொன்போல் போதிந்து வைப்பர் - பொன்போல் உயர்ந்த பொருளாக மனத்தின் கண் வைத்துப் போற்றுவார்.

(க-து) பொறுமையுடையவர் போற்றப் படுவார்.

**12.** தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வியா தடியுறைந் தற்று (தீவினையச்சம்)

(பொ-ள்) தீயவை செய்தார் - தீமைகளைச் செய்தவர், கெடுதல் - அத்தீமையால் தாமே கெடுதல் எப்படி எனில். நிழல் - ஒருவன் நிழல், தன்னை வீயாது - அவனைவிட்டு

நீங்காமல், அடி உறைந்த அற்று - அவன் அடியில் வந்து தங்குவது போல ஆகும்.

(க-து) ஒருவன் நிழல் அவனிடமே வந்து சேர்வது போல ஒருவன் செய்த தீமையும் அவனையே கெடுக்கும்.

13. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு, (ஒப்புரவறிதல்)

(பொ-ள்) தாள் ஆற்றி - ஒருவன் முயற்சி செய்து, தந்த பொருள் எல்லாம் - சேர்த்த பொருள் யாவும், தக்கார்க்கு - தகுந்தவர்களுக்கு. வேளாண்மை செய்தல் பொருட்டு - உதவி செய்வதற்கே பயன்படுத்த வேண்டும்.

(வி - ம்) தக்கார் - உதவி பெறுவதற்குத் தகுதியுடையவர். அவர்கள் வறியர் முடவர் குருடர் பிணியாளர் முதலானவர்கள்

(க-து) தகுந்தவர்க்கு உதவுதலே பொருளின் பயனும்.

14. சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. (ஈகை.)

(பொ-ள்) சாதலின் - இறப்பதைபோல், இன்னாதது இல்லை - துன்பம் வேறில்லை. ஈதல் இயையாக் கடை - வறியவர்க்கு ஒன்றும் கொடுக்க வியலாதவிடத்து, அதூஉம் இனிது - அந்த இறப்பும் இன்பந்தருவதாம்.

(க து) வறியவர்க்கு ஈயாது வாழ்வதைவிட இறப்பது மேல்.

15 ஒன்று உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றுது நிற்பதொன் றில் (புகழ்)

(பொ-ள்) ஒன்று (க) - தனக்கு நிகர் இல்லாது, உயர்ந்த புகழ் அல்லால் - உயர்ந்துள்ள புகழை அல்லாமல், உலகத்து - உலகில, பொன்றுது நிற்பது- அழியாமல் நிலைத்திருப்பது - ஒன்று இல் - வேறு ஒன்றும் இல்லை.

(க-து) உலகில் அழியாது நிற்பது புகழ் ஒன்றே.

16. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து (அருள் உடைமை)

(பொ-ள்) தன்னின் மெலியார் மெல் - தன்மை விட வன்மை குறைந்தவர்களிடம், தான் செல்லுமிடத்து - ஒருவன் அவரை வருத்தச் செல்லும் போது, வலியார் முன் - தன்னை விட வலியவர்க்கு முன், தன்னை நினைக்க - தான் அஞ்சும் நிலையை நினைத்து அருளுடன் நடந்து கொள்ளவெண்டும.

(க-து) எளியவர்களிடம் கருணைகொள்ளவேண்டும்.

17. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (தவம்)

(பொ-ள்) சுடச் சுடரும் பொன்போல் - நெருப்பி லிட்டுக் காய்ச்சுந்தோறும் மாசுநீங்கி ஒளிரும் பொன்னைப்போல, நோற்கிற்பவர்க்கு - தவம் செய்பவர்க்கு, துன்பம் சுடச்சுட - அதனுல் வரும் துன்பங்கள் வருத்த வருத்த, ஒளி விடும் - மாசுநீங்கி அறிவு ஒளியுடன் விளங்கும்.

(க-து) தவத்தினுல் மாசுநீங்கி அறிவெளி உண்டாகும்.

18. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல் (கூடாவொழுக்கம்)

(பொ-ள்) கணை-அம்பு வடிவில் நேராக இருப்பினும், கொடிது - செயலால் கொடியது துன்பம் தருவது, யாழ் கோடு - யாழின் தண்டு வடிவில் வளைந்து இருப்பினும, செவ்விது - செயலால் இன்பம் தருவது. ஆங்கு - அது போல (தவம் செய்வாரையும்) நல்லவர் தீயவர் என் பதை, அன்ன வினைபடு பாலால் - அத்தகைய செயல் களால் விளையும் நன்மை தீமை பகுதிகளைக்கொண்டே, கொளல் - அறிந்து கொள்ள வேண்டும்.

(க-து) நல்லோர் தீயோர்களை வடிவாலன்றிச் செயலால் அறிந்துகொள்ள வேண்டும்.

**19.** வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (வாய்மை)

(பொ-ள்) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய் என்று சிறப்பித்து சொல்லப்படுவது எதுவென்றால், யாது ஒன்றும் தீமையிலாத சொலல் - பிறர்க்குச் சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதலாம்

(வி-ம்) உள்ளதை - நடந்ததைச் சொல்வதுதான் வாய்மை என்று பொதுவாகக் கூறினாலும், பிறர்க்குத் தீமை பயவாத சொற்கள்தான் சிறப்பாக வாய்மை என்று கூறப்படும்.

(க-து) பிறர்க்குத் தீமை பயவாத சொற்களே வாய்மையாகும்.

**20.** செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கால் என்? (வெகுளாமை)

(பொ-ள்) சினம் - சினத்தை, செல் இடத்து-சென்று பலிக்குமிடத்து, காப்பான் - செல்லாமல் தடுப்பவனே. காப்பான் - அருளால் தடுத்துக் கொள்பவன் ஆவான். அல் இடத்து - பலிக்காத விடத்தில், காக்கில் என்-தடுப்பதால் தனக்குவரும் நன்மை என்ன? காவாக்கால் என்?- தடுக்காததால் பிறர்க்கு வரும் தீமை என்ன? ஒன்றுமில்லை.

(க-து) எளியோர் மீது எழும் சினத்தை அடக்குபவன் அருளுடையவன் ஆவான்.

**21.** தன்னுயிர்க் கின்னுமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல் (இன்னு செய்யாமை)

(பொ-ள்) தன் உயிர்க்கு இன்னுமை - தனக்குப் பிறரால் நேரும் துன்பத்தின் கொடுமையை, அறிவான்-உண

ரும் அறிவுடையவன், மன் உயிர்க்கு - உடலில் நிலைத்துள்ள பிற உயிர்களுக்கு, தான் இன்னா செயல் - தான் துன்பம் செய்தல், என் - என்ன கருதியோ ?

(க-து) பிற உயிர்க்குத் துன்பம் செய்யலாகாது.

22. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும் (நிலையாமை)

(பொ-ள்) நா செற்று - பேச முடியாதபடி நாவைத் தடுத்து, விக்குள்மேல் வாராமுன் - விக்கல் மேல் எழுந்து வருவதன்முன் (உடல் நிலை கெடுமுன்), நல்வினை - நல்ல செயல்களை, மேல்சென்று - விரைந்து, செய்யப்படும் - செய்ய வேண்டும்.

(க-து) உடல் நல்ல நிலையில் உள்ளபோதே நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்.

23. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (துறவு)

(பொ-ள்) யாதனின் யாதனின் - எந்த எந்தப் பொருள்களிடத்து, நீங்கியான் - ஒருவன் பற்று நீங்கி வாழ்கின்றானோ, அதனின் அதனின் - அந்த அந்தப் பொருள்களால், நோதல் இலன் - துன்பம் இல்லாதவன் ஆவான்.

(க-து) அகப்பற்று அற்றவனுக்குத் துன்பமில்லை.

24 அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா (அவா அறுத்தல்)

(பொ-ள்) ஒருவனை வஞ்சிப்பது-ஒருவனை ஏமாற்றிக் கெடுக்க வல்லது, அவா - ஆசையாகும். (ஆதலால்) அஞ்சுவதே-அவாவை அஞ்சி விலக்குவதே, அறம்-சிறந்த அறமாகும்.

(வி-ம்) ஒரும், ஒரும் இரண்டும் அசை நிலை.

(க-து) அவாவிற் கடிமையாகலாகாது.

25. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு (இறை மாட்சி)

(பொ-ள்) இன்சொல்லால் - இனிய சொல்லுடனே, ஈத்து - வறியவர் முதலானவர்க்குக் கொடுத்து, அளிக்க வல்லாற்கு - காப்பாற்ற வல்லவனுக்கு, இவ்வுலகு இந்த உலகம், தன் சொல்லால் - தன் சொல்லைக் கேட்பதுடன், தான் கண்ட அனைத்து - தான் கருதிய அத்தன்மையில் நடக்கும்.

(க-து) இன்சொலும் ஈகையும் உலகை வயப்படுத்தும்.

26. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்ருர்
கடையரே கல்லா தவர் (கல்வி)

(பொ-ள்) உடையார் முன் - செல்வம் உடையவர் முன், இல்லார்போல் - செல்வமில்லாதவர் செல்வம் பெற நிற்பதுபோல, ஏக்கற்றும் - (கல்வியுடையவர் முன்) தாழ்ந்து நின்று, கற்ருர் (தலையர்) - கல்வி கற்றவர் தலை சிறந்தவர் ஆவர். கல்லாதவர் - (தாழ்ந்து நிற்க நாணமடைந்து) கல்லாதவர், கடையரே-எக்காலத்தும் இழிந்தவரே ஆவார்.

(க-து) கற்றவர் உயர்ந்தோர் கல்லாதவர் இழிந்தோர்.

27. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர் (கல்லாமை)

(பொ-ள்) கல்லாதவர் - கல்வியில்லாதவர், உளர் என்னும் மாத்திரையர் அல்லால்-உலகத்தில் இருக்கிருர் என்னும் அளவே அல்லாமல், பயவா - விளைவால் பயன் படாத, களர் அனையர்-களர் நிலத்திற்கு ஒப்பாவார்கள்.

(க-து) கல்லாதவர் களர் நிலத்திற் கொப்பாவார்.

**28.** நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது (கேள்வி)

(பொ-ள்) நுணங்கிய - நுட்பமான, கேள்வியர் அல்லார் - கேள்வி அறிவு இல்லாதவர், வணங்கிய வாயினர் ஆதல் அரிது - பணிந்த சொல்லுடையவர் ஆக விளங்குதல் அரிதாம்.

(க-து) கல்வி கேள்வியறிவற்றவர் பணிவாக உரையாட மாட்டார்.

147315

**29.** எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய் (அறிவுடைமை)

(பொ-ள்) எதிரது ஆ(க) - பின் வருவதை முன்னதாக அறிந்து, காக்கும் அறிவினார்க்கு - தீங்குவராமல் காத்துக்கொள்ளக் கூடிய அறிவுடையவர்க்கு, அதிர வருவது - அவர் நடுங்கும்படி வருவதாகிய, ஓர் நோய் இல்லை - ஒரு துன்பமும் இல்லை.

(க-து) பின் நேர்வதை முன்னறிந்து தம்மைக் காத்துக் கொள்பவர்க்குத் துன்பம் இல்லை.

**30.** செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து (குற்றம் கடிதல்)

(பொ-ள்) செருக்கும் - அகந்தையும், சினமும் - வெகுளியும், சிறுமையும் - கீழ்த்தரமான விருப்பமும், இல்லார்-இல்லாதவருடைய, பெருக்கம் - செல்வம், பெருமித நீர்த்து - பெருமையடையும் தன்மையுடையது.

(க-து) அகந்தையும் சினமும் கீழ்மையும் அற்றவர்களிடம் உள்ள செல்வம் பெருமை பெறும்.

31. முதலிலார்க் கூதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை (பெரியாரைத் துணைக்கோடல்)

(பொ-ள்) முதல் இலார்க்கு - முதல் பொருள் இல்லாத வணிகர்க்கு, ஊதியம் இல்லை - அதனால் வரும் பயன் இல்லை, (அது போல) மதலை ஆம் - தம்மைத் தாங்குவதாகிய, சார்பு இலார்க்கு-துணையில்லாதவர்க்கு, நிலை இல்லை - அதனால் வரும் உயர் நிலை இல்லை.

(க-து) பெரியோர் துணை யில்லாதவர்க்கு உயர்நிலை இல்லை.

32. மனநலம் மன்னுயிர்க் காக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும் (சிற்றினஞ் சேராமை)

(பொ-ள்) மன் உயிர்க்கு - நிலை பெற்ற உயிர்களுக்கு, மன நலம் - நல்ல மனம், ஆக்கம் - உயர்ந்த செல்வத்தைக் கொடுக்கும். இனநலம் - நல்லினத்தின் சேர்க்கை, எல்லாப் புகழும் தரும் - எல்லாப் புகழையும் அளிக்கும்.

(க-து) நல்லினச் சேர்க்கை எல்லா நன்மையும் தரும்.

33 ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று
போற்றினும் பொத்துப் படும் (தெரிந்து செயல்வகை)

(பொ-ள்) ஆற்றின - முடியும் முறையால், வருந்தா வருத்தம் - முன் அறிந்து உழைக்காத உழைப்பு, பலர் நின்று போற்றினும் - பின் பலர் துணையாய் நின்று காப்பாற்றினும், பொத்துப்படும் - குறையுடையதாகும்.

(க-து) முறை யறிந்து செய்யு முயற்சியே முடிவு பெறும்.

34. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை;
போகா றகலாக் கடை (வலியறிதல்)

(பொ-ள்) ஆகு ஆறு அளவு - பொருள் வருவாயின் அளவு, இட்டிது ஆயினும் - சிறியதாய் இருந்தாலும்,

போகு ஆறு - செலவாகும் வழியின் அளவு, அகலாக் கடை - (வருவாயின் அளவை விட) அதிகப்படாத விடத்து, கேடு இல்லை - கெடுதி இல்லை.

(க-து) வருவாய்க்குமேல் செலவிடலாகாது.

35. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து (காலமறிதல்)

(பொ-ள்) ஊக்கம் உடையான் - மனவலிமை உடையவன், ஒடுக்கம் - காலம் கருதி ஒடுங்கி யிருத்தல், பொருதகர் - போர் செய்யும் ஆட்டுக்கடா, தாக்கற்கு, தன் பகைமேல் பாய்ந்து தாக்குவதற்கு, பேரும் தகைத்து - பின்னே செல்லும் தன்மையதாம்.

(க-து) காலமறிந்து அடங்கி யிருந்து காரியத்தை முடிக்கவேண்டும்.

36. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின் (இடனறிதல்)

(பொ-ள்) இடன் அறிந்து - ஏற்ற இடத்தை அறிந்து, போற்றி - தம்மைப் பாதுகாத்துக்கொண்டு, போற்றார்கண் செயின் - பகைவரிடம் தொழிலைச் செய்வாராயின், ஆற்றாரும் - வெல்லும் வல்லமை இல்லாதவரும், ஆற்றி அடுப - வன்மையோடு செய்து வெற்றி பெறுவர்.

(க-து) இடமறிந்து தற்காப்புடன் தொழில் செய்தால் பகைவரிடத்தும் வெற்றி பெறலாம்.

37 குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு (தெரிந்து தெளிதல்)

(பொ-ள்) குடிப்பிறந்து - நற்குடியிற் பிறந்து, குற்றத்தின் நீங்கி - குற்றங்களில் விலகிநின்று, வடுப்பரியும் - பழிக்கு அஞ்சி வருந்தும், நாண் உடையான் கட்டே -

நாணமுடையவனிடத்தில் மட்டும், தெளிவு - நம்பிக்கை கொள்ளவேண்டும்.

(க-து) குடிப்பிறப்பும் குற்றமின்மையும் பழிக் கஞ்சுதலும் உடைவனே தேர்வுக்கு உரியவனுவான்.

38. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று (தெரிந்து வினையாடல்)

(பொ-ள்) அறிந்து - ஒருவினைசெய்யும் வகையை அறிந்து, ஆற்றி-முயன்று செய்கிற்பாற்கு அல்லால்-செய்பவனை அல்லாமல் (வேறொருவனை), சிறந்தான் என்று - நம்மிடம் அன்பில் சிறந்தவன் என்று, வினை ஏவல் பாற்று அன்று - தொழில் ஏவும் தன்மையுடையது அன்று.

(க-து) திறமையுடையவனையே தொழிலுக்கு அமர்த்த வேண்டும். (வேண்டியவனென்று திறமையற்றவனை அமர்த்தினுல் தீமையே நேரும்).

39. குடிபுறங் காத்தோம்பி குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (செங்கோன்மை)

(பொ-ள்) குடி - குடிகளை, புறம்காத்து - பிறர் வருத்தாமல் காத்து, ஓம்பி - தானும் வருத்தாமல் நீதியால் காப்பாற்றி, குற்றம் - அவர்களிடம் குற்றம் கண்டால், கடிதல் - தண்டனை கொடுத்து நீக்குதல், வடு அன்று - பழிஆகாது, வேந்தன் தொழில் - அது அரசனது தொழிலாகும்.

(க-து) குடிகளைக்காத்து குற்றம் புரிந்தால் தண்டிப்பது அரசன் தொழிலாகும்.

40. வேலொடு நின்ருன் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு (கொடுங்கோன்மை)

(பொ-ள்) கோலொடு நின்ருன் - கொடுங்கோன்மையில் தண்டிக்கும் அரசன், இரவு-குடிகளிடம் பொருள்

வேண்டுதல். வேலொடு நின்றான் - வழிப்பறிக்கொள்ளை யிட வேலொடு நிற்கும் கள்வன், இடு என்றதுபோலும்- வழிப்போக்கர்களின் பொருளைக்கொடு என்று கேட்பது போல் ஆகும்.

(வி-ம்) பொருள் கொடாவிடில் கள்வன் வேலால் வருத்துவதுபோல் கொடுங்கோல் அரசனும் வேண்டிய பொருள் கொடுக்காத குடிகளைத் தண்டித்து வருத்துவான்.

(க-து) குடிகளிடம் கடும்வரி போட்டு வாங்கும் கொடுங்கோல் அரசன் கொள்ளை அடிக்கும் கள்வனுக்குச் சமமாவன்.

41 அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து (வெருவந்த
செய்யாமை)

(பொ-ள்) அரும்செவ்வி - தன்னைக்காண விரும்புகிறவர்க்கு காட்சியளிக்காமல், இன்னா முகத்தான் - கண்டாலும் கடுமுகம் காட்டுகிறவன். பெருஞ் செல்வம் - அடைந்த பெரிய செல்வம், பேஎய் கண்ட அன்னது உடைத்து - அச்சம் தரும் பொருளைக் கண்டதுபோன்ற தன்மையுடையது.

(வி-ம்) பே(ய்) - அச்சம் தருவது இனிமையற்றது.

"பே நாம் உரும் எனவரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப்பொருள"

தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரியியல், 69

பே என்ற அச்சம்தரும் சொல் பிற்காலத்தில் யகர மெய் உடன்பெற்று பேய் என்று நின்று அச்சப்பொருளை உணர்த்துவதாயிற்று. பின் அதுவே இனிமையல்லாத பொருளையும் உணர்த்தி நின்றது. (உ-ம்) பேய்ச்சுரை, பேய்த்துமட்டி, பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கு போல்வன.

இவை இனிமையற்றவை கசப்பானவை என்ற பொருளில் நின்றன. ஆதலால், பேய் என்றால் அச்சம்தருவது இனிமையற்றது - கசப்பானது என்பதே பொருந்தும். இதற்குப் பேய்-பிசாசு என்பது பொருந்தா உரையாகும்.

(க-து) காணமுடியாமையுங் கடுஞ் சொல்லும் உடையவன் செல்வம் பிறர்க்கு அச்சமும் அருவருப்பும் (வெறுப்பும்) தரும் தன்மையுடையதாம்.

42. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர் (கண்ணோட்டம்)

(பொ-ள்) கண்ணோடு இயைந்தும்-கருணை செலுத்தக் கூடிய கண்களோடு இருந்தும், கண் ஓடாதவர் - உயிர்களிடம் கருணை செலுத்தாதவர், (உலகில் மனிதராக இயங்கினாலும) மண்ணோடு இயைந்த - மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்து அனையர் - மரத்திற்கு ஒப்பாவர்.

(க—து) கருணையற்றவர் மரத்திற்கு ஒப்பாவார்.

43. கடாஅ உருவொடுகண் ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று (ஒற்றாடல்)

(பொ-ள்) கடாஅ உருவொடு-(பிறர் தன்னைக்கண்டு ஐயங்கொண்டு) யார் என வினவாத வடிவுடன் சென்று, கண் அஞ்சாது - ஐயங்கொண்டு கடும் பார்வையுடன் கேட்டாலும் அதற்கு அஞ்சாமல், யாண்டும்-எந்த வகையிலும் எப்போதும், உகாமை வல்லது - மனத்தில் உள்ளதை வெளியில் சொல்லாத வல்லமை யுடையவனே, ஒற்று - ஒற்றனாவான்.

(க—து) ஐயப்படாத வடிவும் அஞ்சாமையும் மறையை வெளிவிடாத வன்மையும் உடையவனே ஒற்றனாவான்.

44 உள்ள மிலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு (ஊக்கமுடைமை)

(பொ-ள்) உள்ளம் இல்லாதவர் - ஊக்கம் இல்லாதவர், உலகத்து - உலகத்தில், வள்ளியம் என்னும் செருக்கு - யாம் வள்ளல் தன்மையுடையோம் என்னும் மதப்பை, எய்தார் - அடையமாட்டார்.

(க—து) ஊக்கமில்லாதவனுக்கு ஈதலால் வரும் மதிப்பு இல்லை.

45. பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்(து)
ஆள்வினை யின்மை பழி (ஆள்வினையுடைமை)

(பொ-ள்) பொறி இன்மை - செல்வம் இல்லாமை, யார்க்கும் பழி அன்று - எவர்க்கும் ஒரு குறையாகாது, அறிவு அறிந்து - தொழில் செய்தற்கேற்ற அறிவை அறிந்து, ஆள்வினை இன்மை - மெய்ம்முயற்சி செய்யாமல் இருப்பதே, பழி - குறையாகும்.

(க—து) செல்வமில்லாமை குறையாகாது முயற்சியில்லாமையே குறையாகும்.

46. மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து (இடுக்கணழியாமை)

(பொ-ள்) மடுத்த வாய் எல்லாம் - வண்டி செல்லத் தடைப்பட்ட இடங்களில் எல்லாம், பகடு அன்னான் - விடாமல் இழுத்துச் செல்லும் எருதைப் போன்றவனை, உற்ற இடுக்கண் - அடைந்த துன்பம், இடர்ப்பாடு உடைத்து - தானே துன்பப்படுத்தலை உடையது.

(க—து) விடாமுயற்சி யுடையவனை அடைந்த துன்பம் தானே துன்பப்பட்டு விலகும்.

47 செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல் (அமைச்சு)

(பொ—ள்) செயற்கை - வினை செய்யும் வகை, அறிந்தக் கடைத்தும்-தெரிந்த விடத்தும், உலகத்து இயற்கை அறிந்து - உலக இயல்பைத் தெரிந்து, செயல் - அதற்கேற்றபடி செய்ய வேண்டும்

(க—து) அமைச்சர் உலக இயல்பை அறிந்து நடக்க வேண்டும.

48 கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். (சொல்வன்மை)

(பொ—ள்) கேட்டார் - கேட்டவர்களின் உள்ளத்தை, பிணிக்கும் தகைய வாய் - கவரும் தன்மைகளை உடையனவாய், கேளாரும் - பகைவர்களும், வேட்ப - விரும்பி ஏற்றுக்கொள்ளும்படி, மொழிவது-சொல்வதே, சொல்லாம்-சொல்வன்மை நிறைந்த சொல்லாகும்.

(க—து) பகைவர்களும் விரும்பி ஏற்றுக்கொள்ளச் சொல்வதே சொல்வன்மையாகும்.

49. எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (வினைத்தூய்மை)

(பொ—ள்) எற்று என்று எத்தன்மையான செயல்களைச் செய்தோமென்று, இரங்குவ - பின்னால் எண்ணித் தானே வருந்தும்படியான தீச்செயல்களை, செய்யற்க - செய்யலாகாது, செய்வானேல் - தவறி ஒருமுறை செய்துவிட்டானாயின், மற்று அன்ன-மீண்டும் அதைப்போன்ற தீச்செயல்களை, செய்யாமை நன்று - செய்யாமையே நல்லது.

(க—து) தீயசெயல்களைச் செய்யலாகாது, தவறிச் செய்துவிட்டால் மீண்டும் செய்யாமல் இருப்பது நல்லதாம்.

50. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்ரு விழுமம் தரும் (வினைத்திட்பம்)

(பொ—ள்) கடைகொட்க-ஒரு செயலை செய்துமுடித்த பின் வெளிப்படும்படி, செய் தக்கது - முன் மறைத்துச் செய்வதே, ஆண்மை - செயல் வன்மையாகும். இடைகொட்கின் - இடையில் வெளிப்படுமானல், எற்ரு - நீக்க முடியாத, விழுமம் தரும் - துன்பத்தைக் கொடுக்கும்.

(க—து) ஒரு தொழிலைச் செய்து முடித்த பின் வெளியிட வேண்டும்.

51. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று (வினை செயல்வகை)

(பொ—ள்) வினையால் - தான் செய்யத் தொடங்கிய தொழிலால், வினை - அதற்கு வேண்டிய பிற தொழில்களையும், ஆக்கிக் கோடல் - செய்து முடித்துக் கொள்ள வேண்டும். (அது) யானையால் - பழகிய யானையைக் கொண்டு, நனைகவுள் யானை - மதத்தால் நனைந்த கன்னத்தை யுடைய வேெருரு யானையை, யாத்த அற்று - கட்டும் தன்மையைப்போல் ஆகும்.

(க—து) ஒரு தொழிலைக் கொண்டே பிற தொழில்களையும் செய்து முடிக்க வேண்டும்.

52. கடனறிந்து காலங்கருதி இடனறிந்(து)
எண்ணி உரைப்பான் தலை (தூது)

(பொ-ள்) கடன் அறிந்து - தான் செய்யக்கூடிய கடமையை அறிந்து, காலம் கருதி - அக் கடமை செய்வதற்கேற்ற காலத்தையும் சிந்தித்து, இடன் அறிந்து - தகுந்த இடத்தையும் தெரிந்து, எண்ணி உரைப்பான் - சொல்லவேண்டிய விதத்தையும சிந்தித்துச் சொல்லக் கூடியவன், தலை - முதன்மையான தூதுவன் ஆவான்.

(க-து) கடமை காலம் இடம் இவற்றை எண்ணிச் செய்பவன் ஏற்ற தூது தருவான்.

**53.** முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான் முந்துறும். (குறிப்பறிதல்)

(பொ-ள்) உவப்பினும் - விரும்பினாலும். காயினும் - சினந்தாலும் (முகம்) தான் முந்துறும் - முகம்முன்னால் காட்டிவிடும். (ஆதலால்) முகத்தின் - முகத்தைப் போல, முதுக் குறைந்தது உண்டோ - அறிவு மிகுந்தது உண்டோ இல்லை.

(க-து) விருப்பு வெறுப்புக்களை முகம் காட்டிவிடும்.

**54.** பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத் தஞ்சா தவர் (அவையஞ்சாமை)

(பொ-ள்) பகை அகத்து - பகைவர் நிறைந்த போர்க்களத்தின் நடுவில், சாவார் - அஞ்சாது சென்று இறக்கத் தகுந்தவர்கள், எளியர் - எளிதாகப் பலர் ஆவர். அவை அகத்து - அறிஞர் நிறைந்த அவையின் நடுவில், அஞ்சாதவர் - அஞ்சாமல் பேசக் கூடியவர்கள். அரியர் - அரிதாகச் சிலர் ஆவர்.

(க-து) அவைக்கஞ்சாமல் பேசுவோர் சிலரேயாவர்.

**55,** பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு (நாடு)

(பொ-ள்) பல் குழுவும் - பல வகையில் வேற்றுமையுடைய கூட்டத்தினரும். பாழ்செய்யும் உட்பகையும் - அழிவு வேலைகளைச் செய்யும் உட்பகைவர்களும், வேந்து அலைக்கும் - அரசனை வருத்துகின்ற, கொல் குறும்பும் - கொலைத் தொழிலுடைய கொடியவர்களும், இல்லது நாடு - இல்லாததே சிறந்த நாடாகும்.

(க-து) வெற்றுமைக் குழுவும் உட் பகைவரும் கொடி யவரும், இல்லாத நாடே நல்ல நாடாகும்

**56.** சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்க மழிப்ப தரண் (அரண்)

(பொ—ள்) பேர் இடத்தது ஆகி - பெரிய இடமுடைய தாய், சிறு காப்பில் - சிறிய பாதுகாவலினால், உறுபகை - வன்மை மிக்க பகைவர்களின், ஊக்கம் அழிப்பது - மன வெழுச்சியை முறியடிப்பதே, அரண் - பாதுகாப்பாகும்.

(க—து) பேரிடத்தில் சிறு காப்பால் பகையை வெல் வதே பதுகாப்பாகும்.

**57.** அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (பொருள் செயல் வகை)

(பொ-ள்) திறன் அறிந்து - பொருள் ஈட்டும் வழி தெரிந்து, தீதுஇன்றி - தீமையற்ற நல்வழியில், வந்த பொருள் - சேர்ந்த பொருள், அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அறத்தையும் அதனால் வரும் இன்பத்தையும் உண்டாக்கும்.

(க—து) தீதிலா நெறியில் சேர்த்த பொருளால் நன்மைகள் விளையும்.

**58.** ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் (படைமாட்சி)

(பொ—ள்) எலி பகை - எலிகளாகி பகைக் கூட்டம், உவரி-கடல்போல் திரண்டு, ஒலித்தக்கால் - இரைந்தால், என் ஆம் - என்ன பயன், நாகம் உயிர்ப்ப - எலிகளின் எதிரியாகிய பாம்பு சீறுவதைக் கேட்ட உடனே, கெடும்- அழிந்துவிடும்.

(க—து) சிறந்த வீரன்முன் பகைவர்கள் நிற்க மாட் டார்கள்.

59. கைவேல் களிற்ரொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் (படைச்செருக்கு)

(பொ—ள்) கை வேல் - கையில் இருந்த வேலை, களிற்ரொடு போக்கி யானையின்மேல் எறிந்துவிட்டு, வருபவன் - கையில் வேலில்லாமல் வருகின்ற வீரன், (தன்பகை எதிர்பட்டபோது) மெய்வேல் பறியா - தன் மார்பில் தைத்திருந்த வேலைப் பறித்து, நகும் - மகிழ்ச்சியடைவான்.

(க—து) மார்பில் வேல் பாய்ந்ததும் உணராமல் போர் செய்வது வீரமாகும்.

60. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (நட்பு)

(பொ—ள்) பண்பு உடையாளர் தொடர்பு - நற்குணமுடையவர்களிடம் கொண்ட நட்பு, பயில்தொறும் - பழகும் தோறும், நூல் நவில்தொறும் - நூலைப் படிக்கும் தோறும், நயம் போலும் - இன்பம் தருவதுபோல் இன்பந் தருவதாம்.

(க—து) நல்லோர் நட்பு பழகப் பழக இன்பந்தரும்.

61. ஊதியம் என்ப தொருவர்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் (நட்பாராய்தல்)

(பொள்( ஒருவற்கு ஊதியம் என்பது - ஒருவனுக்கு இலாபம் என்பது, பேதையார் - அறிவில்லாதவர், கேண்மை - நட்பினை, ஒரீஇ - ஒழித்து, விடல் - அவரை விட்டு நீங்குதலாம்.

(க-து) அறிவிலார் நட்பை விடுவதே நன்மையாகும்.

62. தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் ; ஒன்னர்
அழுத கண்ணீரும் அனைத்து

(பொ-ள்) ஒன்னார் தொழுத கையுள்ளும். பகைவர் வணங்கிய கையின் உள்ளும், படை ஒடுங்கும் - கொலைக்

கருவி மறைந்திருந்து தீங்கு செய்யும்; அழுத கண்ணீரும் - பகைவர் அழுத கண்ணீரும், அனைத்து - அவ்வாறே தீங்கு செய்யும்.

(க-து) பகைவரின் வணக்கத்தையும், கண்ணீரையும் நம்பலாகாது.

63. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில் (பேதமை)

(பொ-ள்) நாணுமை - பழிக்கு அஞ்சாமையும், நாடாமை - நன்மை தீமைகளை ஆராயாமையும், நாரின்மை - அன்பில்லாமையும், யாதொன்றும் பேணுமை - நன்மை ஒன்றையும் விரும்பாமையும், பேதை தொழில் - இவை மூடனது தொழில்களாம்.

(க-து) அறிவிலாதவன் நன்மைகளை விரும்பான்.

64. ஏவவும் செய்கலான் தான்தேருன் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய் (புல்லறிவாண்மை)

(பொ-ள்) தான் தேருன் - அறிவில்லாதவன் தானுக வும் நன்மை தீமைகளைத் தெரிந்து நடக்கமாட்டான், ஏவவும் செய்கலான் - அறிவுடையவர் சொன்னலும் கேட்டு நடக்கமாட்டான், அவ் வுயிர் போம் அளவும் - அவன் உயிர் உடலைவிட்டு நீங்கும் வரையில், ஓர் நோய் - உலகத்திற்கு ஒரு நோய் போல்வான்.

(க—து) தானும் அறியாது அறிவுடையார் சொல்லையும் கேளாது இருப்பவன் உலகிற்கு நோய் போலாவான்.

65. இகலுக்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு (இகல்)

(பொ—ள்) இகலுக்கு - பகைமை மனப்பான்மைக்கு, எதிர் சாய்தல் - எதிர் நில்லாமல் விலகி நிற்றல், ஆக்கம்-

நன்மை தருவதாம்; அதனை மிகல் ஊக்கின்-அப்பகைமை மனப்பான்மையை மிகைப்படுத்தினால், கேடு ஊக்கும் ஆம் - கெடுதியை உண்டாக்கும்.

(க—து) பகைமை இல்லாமல் இருப்பதே நன்மையாம்.

66. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு (பகைமாட்சி)

(பொ-ள்) அறியான் - அறிய வேண்டியவைகளை அறியாதவனாய், அஞ்சும் - அதனால் எதற்கும் அஞ்சுபவனாய், அமைவு இலன் - பிறருடன் பொருந்தி நடக்காதவனாய், ஈகலான் - ஈகைத்தன்மை யில்லாதவனாய் இருப்பவன், பகைக்கு - தன் பகைவர்களுக்கு, தஞ்சம் எளியன் - கீழ் அடங்கும் எளியவன் ஆவான்.

(க—து) அறிவின்மை முதலான குணமுடையவன் பகைவர்க்கு அடிமையாவான்.

67. எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார் (பெரியாரைப் பிழையாமை)

(பொ-ள்) எரியால் சுடப் படினும்-நெருப்பால் சுடப்பட்டாலும், உய்வு உண்டாம் - புண் ஆறி உயிர் வாழ்தல் கூடும்; பெரியார் பிழைத்து - தவத்தால் உயர்ந்த பெரியார்க்குப் பிழை செய்து, ஒழுகுவார் - அவர் மனம் புண்பட நடப்பவர்கள், உய்யார் - அவர் சாபத்திலிருந்து தப்பி வாழ மாட்டார்கள்.

(க—து) பெரியார்க்குப் பிழை செய்யலாகாது.

68. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின் (மருந்து)

(பொ-ள்) அருந்தியது - முன் உண்டது, அற்றது - செரித்ததை அறிந்து, போற்றி - உணவால் தீமை வரா

வகையில் காப்பாற்றி, உணின் - உண்டால், யாக்கைக்கு-அவன் உடம்புக்கு, மருந்து என வேண்டாவாம் - மருந்து என ஒன்றை உண்ண வேண்டியதில்லை.

(க—து) செரித்தபின் தீமையற்ற உணவுண்டால் மருந்து வேண்டியதில்லை.

69. சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்தும் என்பார் (குடிமை)

(பொ-ள்) மாசு அற்ற - குற்றமற்ற. குலம்பற்றி - குடிப்பிறப்பின் பண்பைக் கைக்கொண்டு, வாழ்தும் என்பார் - வாழ்வோம் என்று கருதுபவர், சலம்பற்றி - (வறுமையிலும்) வஞ்சனையைக் கைக்கொண்டு, சால்பு இல செய்யார் - பெருந்தன்மைக்கு மாறான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

(க-து) குடிப்பிறந்தவர் வறுமையிலும் தீமை செய்ய மாட்டார்

70. பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (மானம்)

(பொ-ள்) பெருக்கத்து - செல்வம் பெருகிய காலத்தில், பணிதல் வேண்டும் - பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். சிறிய சுருக்கத்து - செல்வம் சுருங்கிய காலத்தில், உயர்வு வேண்டும் - வறுமையால் இழிவாக நடந்துகொள்ளாமல் உயர்நிலையில் நிற்றல் வேண்டும்.

(க-து) வறுமையில் செம்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

71. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (பெருமை)

(பொ-ள்) பெருமை - பெருந்தன்மை யுடையவர் - என்றும் பணியுமாம்-என்றும் பணிவுடன் நடந்துகொள்

வார்; சிறுமை - கீழ்த் தன்மையுடையவர், தன்னை வியந்து அணியுமாம் - செருக்கினால் தம்மைப் புகழ்ந்து பாராட்டு வார்கள்.

(க—து) பெரியோர் பணிவுடனும் கீழோர் செருக் குடனும் நடந்து கொள்வார்.

72. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (சான்றாண்மை)

(பொ—ள்) இன்னா செய்தார்க்கும் - தீமை செய்தவர்க் கும், இனியவே செய்யாக்கால் - நன்மையே செய்யாவிட் டால், சால்பு என்ன பயத்தது - பெருந்தன்மை என்ன பயன் உடையது.

(க—து) தீமை செய்தார்க்கு நன்மை செய்வதே சான்றாண்மையாம்.

73 உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (பண்புடைமை)

(பொ—ள்) உறுப்பு ஒத்தல்-உறுப்பினால் (உடம்பால்) ஒத்திருப்பது, மக்கள் ஒப்பு அன்று - நன்மக்களோடு ஒப் பாவது அன்று. வெறுத்தக்க பண்புஒத்தல் - நிறைந்த மக்கட்பண்பு ஒத்திருத்தலே, ஒப்பது ஆம் ஒப்பு - பொருந்திய ஒப்பாகும்.

(க—து) மக்கட்பண்பு உடையவர்களே மக்க ளாவார்கள்.

74. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல் (நன்றியில் செல்வம்)

(பொ—ள்) கொடுப்பதும் - பிறர்க்குக் கொடுப்பதும், துய்ப்பதும் - தாம் அநுபவிப்பதும், இல்லார்க்கு-இல்லா தவர்க்கு, அடுக்கிய கோடி உண்டாயினும் - பல கோடிப் பொருள் இருந்தாலும், இல் - பயனில்லையாம்.

(க—து) கொடுத்துண்டு வாழாதவர்க்குப் பொருளால் பயனில்லை.

75. ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு (நாணுடைமை)

(பொ-ள்) ஊண் - உணவும், உடை - ஆடையும், எச்சம் - ஒழிந்த பிறவும், உயிர்க்கு எல்லாம் வேறல்ல - உயிர்களுக்கெல்லாம் பொதுவானதாம், நாண் உடைமை - பழிக்கஞ்சும நாணம் உடைமையே, மாந்தர் சிறப்பு - நன் மக்களுக்குரிய சிறப்பாகும்.

147315

(க—து) பழிக்கஞ்சுவதே நன்மக்களுடைய குணமாம்.

76. குடி செய்வார்க்கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும் (குடி செயல்வகை)

(பொ-ள்) குடி செய்வார்க்கு - தம் குடியை உயரச் செய்பவர்க்கு, பருவம் இல்லை - கால வரையறை இல்லை, மடி செய்து - சோம்பலாய் காலம் தாழ்க்கச் செய்து, மானம் கருத - தன் தொழிலைத் தாம் செய்வதில் மானத்தைப் பார்க்க, கெடும் - அக்குடி கெட்டுவிடும்.

(க—து) குடியை உயர்த்துபவன் சோம்பலின்றி எப்போதும் உழைக்க வேண்டும்.

77. சுழன்றும் ஏர்பின்னது உலகம்; அதனால்
உழன்றும் உழவே தலை (உழவு)

(பொ-ள்) உலகம் சுழன்றும் - உலகம் சுழன்றும் ஏர் பின்னது - உழவுத் தொழிலையே பின்பற்றி வாழ்வதாய் உள்ளது, அதனால் - ஆகையால், உழந்தும்-பல தொழில்களில் சென்று வருந்தினாலும், உழவே தலை - உழவுத் தொழிலே தலையான தொழிலாகும்.

(க—து) உழவுத் தொழிலே உயர்ந்த தொழிலாம்.

TB
031(9) N50

78. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது (நல்குரவு)

(பொ—ள்) நெருப்பினுள் - நெருப்பின் நடுவில், துஞ்சலும் ஆகும் - தூங்கலும் கூடும், நிரப்பினுள் வறுமையில், யாது ஒன்றும் கண்பாடு அரிது - எவ்வழியிலும் கண் உறங்குதல் அரிதாம்.

(க—து) வறுமையில் தூங்கவியலாது.

79. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பறந்து
கெடுக உலகியற்றி யான் (இரவச்சம்)

(பொ—ள்) இரந்தும் - (மக்கள் முயற்சிசெய்து வாழாமல்) பிறரிடம் சென்று இரந்தும், உயிர் வாழ்தல் வேண்டின் - உயிர்வாழ விரும்பினுல், உலகு இயற்றியான் - அத்தகைய உலக இயலை வகுத்தவன், பறந்து கெடுக விரைவில் அழிந்து விடட்டும்.

(வி-ம்) மக்கள் முயன்று உழைத்து உயிர்வாழ வேண்டும். இங்ஙனமன்றிச் சோம்பலால் முயற்சி செய்யாமல் இரந்து உயிர் வாழும்படி உலக அமைப்பு ஏற்பட்டிருக்குமானுல் அவ்வமைப்புக்குக் காரணமாயிருந்தவன் விரைந்து அழிந்துவிட வேண்டும். அவன் அழியின் அவனுல் அமைத்த அமைப்பும் அழியும் - இரக்குந் தன்மை ஒழியும்.

(க—து) இரந்து வாழ்வது உலகிற் கேற்றதன்று.

80 சொல்லப் பயன்படுவர் சான்றேர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ் (கயமை)

(பொ—ள்) சான்றேர் - மேலோர், சொல்ல பயன்படுவர் - சொன்ன அளவில் கேட்டுப் பயன் படுவார்கள். கீழ் - கீழோர், கரும்பு போல் கொல்ல - கருமபைச் சிதைப்பதுபோல் வருத்தினுல், பயன்படுவர் - பயன் படுவார்.

(க—து) கீழோர் வருத்தினுல்தான் பயன் படுவார்.

---



147315